**Spl.CC.No.80/2019**

**18-09-2020** ஆம் தேதி அன்று சாட்சி **P.W.7** பழனிகுமார் மீண்டும் மனுவின் பேரில் **(CMP.No. 628/2020)** மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**.**

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்பொழுது தமிழ்நாடு வேளாண் துறையில் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்ககத்தில் விதைசான்று அலுவலராக கோவை அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன்**.** நான் கோயமுத்தூர் சவுரிபாளையத்தில் பெர்க்ஸ் ஸ்கூல் அருகில் குடியிருந்து வருகிறேன்**.** எனது சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம்**,** ஸ்ரீவள்ளிப்புத்தூர் வட்டம்**,** ராஜகோபாலபுரம் என்ற சிற்றூராகும்**. 2011** ஆம் வருடத்தில் நான் எந்த அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தேன் என்றால்**,** கோயமுத்தூரில் தமிழ்நாடு வேளாண் துறைக்குட்பட்ட மண் வகையீடு மற்றும் நிலபயன்பாடு நிறுவனம் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தேன்**. 2011** ஆம் வருடத்தில் நவம்பர் மாதத்தில் நான் கோவை மாவட்டம்**,** பி**.**என் புதூரில் குடியிருந்து வந்தேன்**.** அப்போது எனது அலுவலகத்தின் தலைமை அதிகாரி யார் என்றால் வேளாண்மை உதவி இயக்குனர் ஆவார்**.** கோவை மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து எங்கள் அலுவலகத்திற்கு வேண்டுகோள் கடிதம் வரவில்லை**.** தொலைபேசி மூலம் வேண்டுகோள் வந்தது**.** எத்தனை மணிக்கு தொலைபேசி மூலம் அந்த அழைப்பு வந்தது என்றால் அது பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது**. 28.11.2011** ஆம் தேதி மாலையில் **5** மணிக்கு எனது வேளாண்மை துறை உதவி இயக்குனர் என்னிடம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் முன்னிலையாகும்படி என்னிடம் சொன்னார்**.** எழுத்து மூலமான உத்திரவு எதுவும் எனது உயர் அதிகாரி அளிக்கவில்லை**.** வாய்மொழியாகத்தான் சொன்னார்**. 28.11.2011** ஆம் தேதிக்கு முன்பாக நான் கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு சென்றிருந்திருக்கிறேனா என்றால்**, 28.11.2011** ஆம் தேதிக்கு முன்பாக நான் அந்த அலுவலகத்திற்குச் சென்றதில்லை**.** எனது துறையில் எனக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டிருந்ததா என்றால்**,** ஆம் வழங்கப்பட்டிருந்தது**. 28.11.2011** ஆம் தேதி மாலை **6** மணிக்கு நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்குச்

சென்றேன். அப்போது எனது அடையாள அட்டையை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காண்பித்தேனா என்றால் காண்பிக்கவில்லை. நான் அந்த அலுவலகத்திதற்குச் சென்று கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அறிக்கை செய்தேன். அப்போது வேறு யாராவது அங்கு இருந்தார்களா என்றால் நிறைய அதிகாரிகள் இருந்தார்கள். அவர்கள் யார்,யார் என்று எனக்குத் தெரியாது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் எனது வசிப்பிட முகவரிக்கான ஆவணமோ அல்லது எனது சொந்த ஊர் குறித்த ஆவணமோ கேட்டு வாங்கினார்களா என்றால், அவ்வாறு கேட்கவில்லை. எனது பணி பதிவேட்டில் எனது முகவரியாக ராஜகோபாலபுரம், நாச்சியார்பட்டி, திருவில்லிப்புத்தூர், விருதுநகர் மாவட்டம் என்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னிடம் எழுத்து மூலமாக மறுநாள் காலையில் ஒரு வழக்கிற்கு சாட்சியாக நிற்கும்பொருட்டு வரவேண்டுமென எழுத்து வடிவில் கொடுக்கவில்லை. **29.11.2011** ஆம் தேதி நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காண்பிப்பு பிரிவு அலுவலகத்திற்குச் சென்ற பொழுது நான் **28.11.2011** ஆம் தேதி அந்த அலுவலகத்தில் பார்த்த அதிகாரிகளோடு வேறு சில அதிகாரிகளும் அங்கு இருந்தார்கள். அங்கிருந்த அதிகாரிகளின் பதவிவழி பெயர் எனக்குத் தெரியாது. துணைக் காவல் கண்காணிப்பாளர் ராமச்சந்திரன் என்னிடம் அவருக்கு வரப் பெற்ற உத்திரவை காண்பிக்கவில்லை. எங்கு செல்லவுள்ளோம் என்பதைப் பற்றியும் அந்த சமயத்தில் என்னிடம் சொல்லவில்லை. நானும், டி.எஸ்.பி ராமச்சந்திரன், மற்றொரு அரசு சாட்சி திருமதி ராஜாமணி, (வருவாய் ஆய்வாளர் ), ஆண் காவலர்கள் மற்றும் பெண் காவலர்கள் சென்றோம். நாங்கள் சென்ற இடத்திற்கு அதற்கு முன்பாக நான் சென்றதில்லை. நாங்கள் சென்ற வணிக வளாகத்தில் நான்கு கம்பெனிகள் இயங்கி வந்தன. அந்த வணிக வளாகத்தில் நான்கு கம்பெனி அலுவலகங்கள் தான் இயங்கி வந்தன. வேறு எதுவும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. மேற்படி வணிக வளாகங்கத்திற்கு இருபுறமும் தொடர்ந்து குடியிருப்பு வீடுகள் இருந்தனவா என்றால், குடியிருப்பு வீடுகள் இருந்தன. நாங்கள் சென்றபொழுது வணிக வளாகம் பூட்டப்பட்டிருந்தது. டி.எஸ்.பி அவர்கள் வணிக வளாகத்திற்குப் பக்கத்தில் குடியிருந்தவர்களை விசாரித்தார். அந்த காம்ப்ளக்சிற்கு வாட்ச்மேன் இருந்தாரா என்றால் இல்லை. வணிக வளாகத்திற்கு வடபுரத்தில் குடியிருந்தவர்களை டி.எஸ்.பி விசாரித்தாரா அல்லது தென்புறத்தில் குடியிருந்தவர்களை டி.எஸ்.பி விசாரித்தாரா என்றால் அந்த இடத்திற்கு **4,5** பேர் வந்திருந்தார்கள். அவர்கள் வணிக

வளாகத்திலிருந்து எப்பகுதியில் குடியிருந்து வந்தவர்கள் என்று எனக்குத் தெரியாது. வணிக வளாகத்தின் சாவி யாரிடம் உள்ளது என்பது குறித்து டி.எஸ்.பி யிடம் தெரிவித்த நபரின் பெயர் எனக்குத் தெரியாது. உமா என்பவர் எங்கு குடியிருந்து வந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. உமாவின் தொலைபேசி எண்ணை வணிக வளாகத்திற்கு அருகில் குடியிருந்தவர்களில் ஒருவர்தான் டி.எஸ்.பிக்கு கொடுத்தார். நாங்கள் வணிக வளாகத்திற்குப் போகும்போது என்ன நேரம் இருக்கும் என்றால், காலை சுமார் **7** மணி இருக்கும். உமா வணிக வளாகத்தின் சாவியை கொண்டுவந்து கொடுக்கும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் காலை **9** மணி இருக்கும். எனது முதல் விசாரணையில் திரு.பொங்கலூர் பழனிசாமியின் சகோதரர் அர்ஜுணனும், சாய்பிரசாத் என்ற மேலாளரும் அங்கு வந்தார்கள் என குறிப்பிட்டுள்ளேன். அதில் கொஞ்ச நேரம் என நான் சொல்லியிருப்பது மணிக்கணக்கில் அல்ல. ஒரு **10, 15** நிமிடத்தில் அவர்கள் அங்கு வந்தார்கள். உமா அவர்கள் தனியாகவும், அர்ஜுணனும், சாய்பிரசாத்தும் தனியாகவும் அந்த இடத்திற்கு வந்தார்களா என்றால் ஆம். டி.எஸ்.பி அர்ஜுணனிடம் காண்பித்த அங்கீகாரக் கடிதத்தை நான் அப்போது படித்துப் பார்த்தேனா என்றால் நான் படித்துப் பார்க்கவில்லை. அந்த அங்கீகாரக்கடிதம் **Ex.P7** ல் இல்லையென்றால் சரிதான். வணிக வளாகத்தில் சோதனை செய்யும்போது என்ன நேரம் என்றால் காலை **9** மணிக்குமேல் சோதனை செய்தார்கள். அச்சோதனையில் **73** ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக **Ex.P.7** ல் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். **Ex.P.7** ல் பார்வை மகசரோ, வரைபடமோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். **Ex.P.7** ல் நானும், வருவாய் ஆய்வாளர் ராஜாமணியும் **(PW.6)**, திரு.என்.அர்ஜுணனும், மேலாளர் சாய்பிரசாத்தும், உதவி ஆய்வாளர் உமாவும், காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களும் கையெழுத்து செய்துள்ளோம். **Ex.P.7** ஆவணத்தில் ஒரு பக்கத்தில் மட்டும் (பக்கம் **29** ல்) உமாவின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான் (சாட்சியிடம் **Ex.P.7** ஆவணத்தைக் காண்பித்து வினவப்பட்டது). **Ex.P.7** ஆவணத்தில் பக்கம் **29** ல்தான் **73** ஆவணங்கள் எழுதப்பட்டு முற்றுப்பெறுகிறது என்றால் சரிதான். மேற்படி பக்கம் **29** ல் **29.11.2011** ஆம் தேதி காலை **7** மணிக்கு சோதனை துவங்கி மாலை **6** மணிக்கு சோதனை முடிக்கப்பட்டதாக எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சோதனை சம்மந்தமாக பார்வை மகசரும், சோதனை ஜாபிதாவும் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், ராஜாமணியும், அர்ஜுணனும், சாய்பிரசாத்தும், உமாவும் கையொப்பம் இட்டோம் என்றும், சொல்லியுள்ளேன்

என்றால் சரிதான். அந்த பார்வை மகசரும், சோதனை ஜாபிதாவும் **Ex.P.7** ஆவணத்தில் காணப்படவில்லை என்றால் சரியல்ல. சோதனை ஜாபிதா **Ex.P.7** ல் உள்ளது. பார்வை மகசர் மட்டும் **Ex.P.7** ல் இல்லை. வணிக வளாகம் அமைவிடம் குறித்து வரைபடம் ஏதும் டி.எஸ்.பி தயார் செய்தாரா என்றால் அது எனக்கு சரியாக தற்போது நினைவில்லை. **4,5** பேர் அங்கு வந்தவர்களை பக்கத்தில் வைத்துக் கொண்டு சோதனை மேற்கொண்டார்களா என்றால் அவ்வாறு மேற்கொள்ளவில்லை. **74** ஆவது ஆவணமாக வங்கியில் ரூ.**12** லட்சம் டிபாசிட் செய்ததற்கான **FD Receipt** கிடைத்தது, அதன் அசலை டி.எஸ்.பி அர்ஜுணனிடம் கொடுத்துவிட்டு, அதன் ஜெராக்சை கைப்பற்றிக் கொண்டார் என எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இது சம்மந்தமாக **Ex.P.7** ல் குறிப்பு உள்ளதா என்றால் குறிப்பு உள்ளது. **Ex.P.7** ல் பக்கம் எண்.**5** ல் மேற்கண்ட குறித்த குறிப்பு உள்ளது. சோதனை ஜாபிதாவில் உள்ள ஆவணப்பட்டிலில் **73** வரைக்கான ஆவணங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. **74** ஆவணமாக **FD receipt** குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மொத்தமாக **73** ஆவணங்கள்தான் சோதனையில் கைப்பற்றப்பட்டதாக **Ex.P.7** ல் ஆவணத்தில் பக்கம் எண்.**29** ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எப்பொழுது விசாரித்தார் என்றால், **29.11.2011** ஆம் தேதி அன்றே சோதனை நடந்து முடிந்த அன்றே மாலையில் என்னை விசாரித்தார். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்து பதிவு செய்தார். ஆனால் என்னிடம் கையெழுத்து எழுதுவும் அதில் வாங்கவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் நான் உமாவுடன் சேர்ந்து அர்ஜுணனும், சாய் பிரசாத்தும் வந்தார்கள் என சொல்லியுள்ளேனா என்றால், சரியல்ல. உமா வந்த சிறிது நேரம் கழித்து அர்ஜுணனும் சாய்பிரசாத்தும் வந்தார்கள் எனச் சொல்லியுள்ளேன். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் காலை **7** மணிக்கு சோதனை துவங்கியதாகச் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காலை **7** மணிக்கே சோதனை துவங்கி விட்டது. கூடுதல் காவல் கணகாணிப்பாளர் விசாரணையில் சோதனையின்போது **73** ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக மட்டுமே கூறியுள்ளேன் என்றால் சரிதான். **74** ஆவது ஆவணமாக **FD receipt** குறித்து முதன்முதலில் இந்நீதிமன்றத்தில்தான் சொல்கிறேன் என்றால் சரிதான். **73** ஆவணங்களைத்தான் டி.எஸ்.பி அவர்கள் கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்ததாக கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் நான் தெரிவித்திருக்கிறேன் என்றால் சரிதான். பார்வை மகசரில்

நானும், மற்ற சாட்சிகளும் கையொப்பமிட்டதாக கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் டி.எஸ்.பி அவர்கள், வீடு சோதனை ஜாபிதா மற்றும் **73** ஆவணங்களை ஒப்படைத்ததாக மட்டுமே சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சோதனை என் முன்னிலையில் நடக்கவில்லை. நான் சோதனையின்போது உடன் சென்றிருக்கவில்லை என்றால் சரியல்ல. **Ex.P.7** ஆவணத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது துறையின் உதவி வேளாண் இயக்குனரின் ஆணையின்பேரில் **28.11.2011** ஆம் தேதி நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்குச் சென்றதாகவும், மறுநாள் காலை சோதனை செய்ய டி.எஸ்.பி யுடன் சென்றதாகவும், சோதனையின்போது நான் உடன் இருந்ததாவும் நான் முதல் விசாரணையில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஓம்/பழனிகுமார்

// உத்திரவுப்படி//